உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறை வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 23 புதன்கிழமை (08 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 12

# வவுனியாவில் எல்லைப்புற ராணுவ நிலைகளை
# புலிகள் தாக்கலாம் என்று படையினர் அச்சம்

## கனரக ஆயுதங்களை பிரதான தளத்துக்கு மாற்றுகின்றனர்

வவுனியா, டிசம்பர் 8

வவுனியா எல்லைப் புற இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் எந்நேரமும் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று இராணுவத்தினர் மத்தியில் பெரும் அச்சம் நிலவுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதனால் எல்லைப் புற நிலைகளில் உள்ள கனரக வாகனங்கள் மற்றும் ஆயுதாதிகளை பிரதான தளத்துக்கு மாற்றி வருகின்றனர்.

பூநகரித் தாக்குதலின் போது தாம் கைப்பற்றிய கனரக ஆயுதங்களைக் கொண்டு, நீண்ட தூரத்தில் இருந்து தாக்கும் ஆயுதங்களைக் கொண்டு, விடுதலைப் புலிகள் எல்லைப்புற இராணுவ நிலைகளை எந்த நேரமும் தாக்கலாம் என்று இராணுவ அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து வவுனியா எல்லைப்புறக் காவல் நிலைகளில் தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

செட்டிகுளம், பம்பைமடு, நொச்சிமோட்டை, மகாகச்சக்கொடி, குடாகச்சக்கொடி போன்ற எல்லைப்புற இராணுவ நிலைகளில் தற்காப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டு வருகின்றன.

அது மட்டுமன்றி, மேற்சொன்ன எல்லைப்புற நிலைகளில் வைக்கப்பட்டிருந்த டாங்கிகள், கனரகத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட பாரிய வாகனங்கள் என்பவற்றை அகற்றி வவுனியா தலைமைப் படைத்தள முகாமிற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகள் எல்லைப்புறக் காவல் நிலைகளைத் தாக்கும் பட்சத்தில், பூநகரியில் ஏற்பட்டது போன்ற ஆயுத தளபாட இழப்பைத் தவிர்ப்பதே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் மதிப்பு 100 அடி உயர்ந்தது!

### பிரதமருக்கு வந்த கவலை

கொழும்பு, டிச. 8

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனின் பிறந்த தினமன்று கொழும்பு குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று பீதி கிளப்பும் வதந்திகளை பரப்பியதன் மூலம் திரு. பிரபாகரனின் உயரத்தை ஓர் அங்குலத்தில் இருந்து 100 அடிக்கு உயர்த்தி விட்டார்கள். இவ்வதந்திகளை விடுதலைப் புலிகள் பரப்பவில்லை. எமது சொந்த மக்களே பரப்பி விட்டார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நிவித்திகலையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது பிரபாகரன் இரத்தினபுரிக்கு வருவார் என்றும் ஆகவே நவம்பர் 26 அன்று இரத்தினபுரி செல்லவேண்டாம் என்றும் எனக்கு ஆலோசனை கூறப்பட்டது.

அது நல்ல விஷயம். அவர் இரத்தினபுரி வந்தால் அங்கு வைத்து அவரைப் பிடித்துவிடலாம். யாழ்ப்பாணம் செல்லத் தேவை இல்லை என நான் அதற்குப் பதிலளித்தேன் — என்று பிரதமர் தெரிவித்தார்.

(இ-எ)

## கொண்டச்சி - சிலாவத்துறையில் வெளியேறிய படையினரால் நிலக்கண்ணிகள் புதைப்பு

யாழ்ப்பாணம், டிச. 8

கொண்டச்சி, சிலாவத்துறை ராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய படையினர் அப்பகுதிகளில் பெருமளவு நிலக்கண்ணிகளை விதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் அங்கு மக்கள் குடியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி மறுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள நிலக்கண்ணி, மற்றும் மிதிவெடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மடு அகதிகள் விவகாரம்: பாரிஸில் பேச்சு நடக்கிறது

கொழும்பு, டிச. 8

மடு அகதி முகாமுக்கு ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் மீண்டும் பணிபுரியச் செல்வதற்கு உதவு முகமாக பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஜெனிவாவில் உள்ள ஐ நா. அகதிகள் தூதரகத் தலைமை அலுவலகம்தொடர்பு கொண்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் தொடர்பு கொண்டுள்ளனர் என கொழும்பில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரகப் பிரதிநிதி ஹஸிம் ஏ. உற்கன் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் கடற்படைத் தளம் மீண்டும் திறக்கப்படமாட்டாது

கொழும்பு, டிச. 8

பூநகரி முகாமின் பாதுகாப்பு எல்லைகளை மீண்டும் பலப்படுத்துவதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. ஆனால் அப்பகுதியில் கடற்படைத் தளத்தை மீண்டும் திறக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

— இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்க சி. என். என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

பிரதமர் இவ்வாறு தெரிவித்திருப்பதால் பூநகரிப் பகுதியில் இனிமேல் கடற்படைத் தளம் இருக்காது என்று 'சண்டே ரைம்ஸின்' பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகையில் வைத்து சி. என். என். செய்தியாளர் அஷ்ஸ் றேக்கு பேட்டி அளித்தார்.

அந்தப் பேட்டியில் பிரதமர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அடுத்த இரண்டு ஆண்டுகளில் வடபகுதியில் தீவிரவாதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தீவிரவாதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் வடபகுதியில் தேர்தல் நடத்தப்படும்,

பேச்சுவார்த்தைக்கான கதவு விடுதலைப் புலிகளுக்கு இன்னும் திறந்தே உள்ளது. ஆனால் இப்பேச்சுகளில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கு பற்றும் — என்றார்.

(உ-எ)

## அரசாங்க அதிபர் திரும்பும் வரை மறியல் போராட்டம் செய்யாதீர்

### சமூக சேவை உ. பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். சமூக சேவைப் பகுதி வழங்க வேண்டிய பல லட்சம் ரூபா பணம் சம்பந்தமாக அரசாங்க அதிபர் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் —

அவர் திரும்பும்வரை எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம் என்றும் —

யாழ். சமூகசேவைப் பகுதியின் உதவிப் பணிப்பாளர் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையைக் கேட்டுள்ளார்.

மாணவர் உணவு முத்திரை, வறுமை நிவாரண முத்திரை ஆகியவற்றிற்குப் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாணவர்களுக்கும், மக்களுக்கும் வழங்கி இருந்தன.

இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை சமூக சேவைப் பகுதி நீண்ட காலமாக வழங்கவில்லை. அப்பணத்தை நாளை ஒன்பதாம் திகதிக்கு முன் செலுத்த வேண்டும் என்றும் — தவறினால் உதவிப் பணிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி- முல்லைத்தீவில் தமிழீழ நீதிமன்றங்கள்

யாழ்ப்பாணம், டிச. 8

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் இம் மாத இறுதிக்குள் இயங்கவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் புதுக்குடியிருப்பிலும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளுக்கும் மாவட்ட நீதிமன்றங்கள் விரைவில் அமைக்கப்படஉள்ளதாக நீதி நிர்வாகதுறையினர் தெரிவித்தனர்.

(இ-த)

## அத்வானியும் மற்றும் தலைவர்களும் கைது

புதுடில்லி, டிச. 8

கடந்த ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி அயோத்தி பாபர் மசூதி இடிப்பு வழக்குத் தொடர்பாக பாரதீய ஜனதா தலைவர் எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் கல்யாண் சிங் ஆகியோருடன் வேறு இருவரும் நேற்று லக்னோ உயர்நீதி மன்றத்தின் உத்தரவுப் படி கைது செய்ப்யபட்டனர்.

பள்ளிவாசலை இடிப்பதற்கு சூழ்ச்சி செய்தது என்ற குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரையும் பிணையில் வெளியே கொண்டு வருவதற்கும் நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது

இதனிடையில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை இன்று புதன் நடத்துவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

## முச்சந்தி முரளி



நடுக்கம் இப்போ தெற்கில் நிலத்துக்கும் வந்திருக்கு பாருங்கோ......?

## நாமே தலைவர் என்கிறார் பண்ருட்டி

சென்னை, டிச 8

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் நானே!

இவ்வாறு முன்னாள் மாநில அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று அறிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளராக நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி இருக்கிறார் என்றும் அவர் அறிவித்தார்.

தமது தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சியே உத்தியோக பூர்வமான கட்சி என்றும் அவர் அறிவித்தார்.

(முன் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## 209 பயணிகளுடன் கோமாரி?

கொழும்பு, டிச. 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 209 பயணிகளை ஏற்றிக்கொண்டு ''கோமாரி'' கப்பல் இன்று திருகோணமலையில் இருந்து புறப்படும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை — எதிர்வரும் 10 ஆம் திகதி ''மார்கோ'' என்ற கப்பல் 70 பயணிகளுடன் [illegible] செல்லும் என்றும் [illegible] செய்திகள் மேலும் தெரிவித்தன.

(த-க)

## ஷெல் வீச்சில் ஒருவர் காயம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஒருவர் காயம் அடைந்தார்.

எஸ். பொன்னுத்துரை என்பவரே காயமடைந்தவர் ஆவார். காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-13-17-15)

## தமிழ் இளைஞர்களை கடத்திய கப்டன் முனாஸ் பூநகரியில் பலி!

கொழும்பு, டிச. 8

கிழக்கு மாகாணத்தில் பல தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமற் போனதற்கு அல்லது கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த கப்டன் முனாஸ் என்பவரும் பூநகரித் தாக்குதலின் போது மாண்டு போனதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

பூநகரித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்ட சிப்பாய்களை மீட்பதற்காக அனுப்பப்பட்ட விசேட படை அணியில் கப்டன் முனாஸும் அங்கம் வகித்தார். அந்த மோதலில் புலிகள் நடத்திய தாக்குதிலில் அவர் கொல்லப்பட்டார்.

கப்டன் முனாஸ் ஸ்ரீலங்கா இராணுவத்தின் உளவுப் பிரிவில் பணிபுரிந்தார். கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிய வேளையில்—

அங்கு பல தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமற் போனதற்கும், கொல்லப்பட்டதற்கும் இவரே சூத்திரதாரியாக இருந்தார். தமிழ்ப் பெண்களைக் கடத்துவதற்கும், அவர்களைப் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்துவதற்கும் இவர் காரணமாக இருந்தார்.

கொழும்புக்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அங்கும், சுற்றுப்புறங்களில் வாழ்ந்த தமிழ் இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டதற்கும் இவரே காரணமாக இருந்தார்.

(அ)

## அரசின் தலைவாசலில் நின்று தொண்டா பயங்கரவாதம்

### சுதந்திரக் கட்சி எம் பிக்கள் அறிக்கை

கொழும்பு, டிச. 8

எமது நாட்டை அழிப்பதற்காக பிரபாகரன் வன்னிக் காடுகளில் இருந்து ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றார். அதே மாதிரியான — அரசியல் மற்றும் பொருளாதாரப் பயங்கரவாதத்தை அமைச்சர் தொண்டமான் அரசாங்கத்தின் தலைவாசலில் இருந்து கொண்டு நடத்திவருகிறார்.

சுதந்திரக் கட்சி எம். பிக்களான எஸ் எல். குணசேகரா திலக் கருணாரத்னா ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் தொண்டமான் மற்றும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகியோரின் சதிச்செயல்களை முறியடிக்க அனைத்து அரசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மிதந்து வந்த பொருளால் மற்றும் ஒரு சிறுவன் நேற்று காயம்

யாழ்ப்பாணம், டிச. 8

கடலில் மிதந்து வந்த பொருளால் மற்றும் ஒரு சிறுவன் காயம் அடைந்தார்.

நேற்றுக் காலை குருநகரில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த லோறன்ஸ் நிமால் (வயது 12) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். தலையில் காயம் அடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடலில் மிதந்து வந்த சிறிய டப்பி போன்ற ஒருபொருளை

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் நில நடுக்கம்; 4 பேர் பலி !வீடுகள் சேதம்!!

கொழும்பு, டிச. 8

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நாட்டின் தெற்கு பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. 2 நிமிடங்கள் நீடித்த நில நடுக்கத்தால் 4 பேர் கொல்லப்பட்டனர். பல வீடுகள் சேதமடைந்தன.

கொழும்பு, கண்டி, மஹரகம, களுத்துறை, குருநாகல் காலி உட்பட நாட்டின் மலை நாட்டிலும், தெற்குப் பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொத்துஹரப் பகுதியில் வீடொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் இருவர் காயமடைந்தனர்.

வீரப்பு கெதற என்ற இடத்திலும் நிலநடுக்கத்தினால் ஒருவர் கொல்லப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த நூறு ஆண்டுகளில் இலங்கையில் 50 க்கும் அதிகமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் ஒரு சில மாத்திரமே முக்கியத்துவம் வாய்ந்தவை என்று தெரிவிக்கப்பட்டது.

நில நடுக்கத்தைப் பதிவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மில்லுக்கு பாவிக்கக்கூடிய 30 குதிரைச் சக்தியுடைய இயந்திரமும், 45 குதிரைச் சக்தியுடைய இயந்திரமும், மில் உபகரணங்களும், மர வேலை இயந்திரமும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: N. மகேந்திர குமார், ''யோகா இல்லம்'', இல. 30, பலாலிவீதி, திருநெல்வேலி (வசந்தம் மொத்த கொள்வனவு நிலையம் முன்பாக). (28304)

## வாங்குகிறோம்

இலுப்பை, வேப்பம் விதைகள் வாங்குகிறோம் ''மில்க் வைற்'' (சி-6664)

## 200 மி. லீற்றர் போத்தல்

200 மி. லீற்றர் திரவம் கொள்ளக்கூடிய கறுப்பு வட்ட வடிவ வெற்றுப் போத்தல்கள் தேவை. தொடர்பு: மில்க் வைற். (சி-6663)

## தவறிவிட்டது

திருமதி வி. முத்தையாவின் ஓய்வூதியப் பட்டியல் மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் மெமோறியல் பாடசாலை முன்பாக, P. சிவகுமார் (கோழிப்பண்ணை) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (28317)

மூக்குக் கண்ணாடி 5 ஆம் திகதி காலை 8மணி அளவில் மடத்து வீதியில், வேம்படி வீதிச் சந்திக்கும், பிரதான வீதிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து 653, ஆஸ்பத்திரி வீதி (சிங்கள மகா வித்தியாலயத்துக்கு முன்பாக), தேவா தையல் கடையில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். (28326)

04 - 12 - 93 அன்று சனிக்கிழமை கல்வியங்காட்டுச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்தைக்கும் இடையில் 1 பவுண் எடையுடைய கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. எடுத்தவர்கள் ந. நல்லையா, மடம் ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (6841)

## பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி - I காவியும் அதன் பிரயோகங்களும், மாதிரி வினாத்தாள்களும் - விடைகளும் ஆகிய நூல்கள் யாழ். நகரெங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர் சி. துரையப்பா, B. Sc. (Maths) M. Sc. (Agric), MAES (Sri Lanka) (6837)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 12 — 1936

மறைவு: 19 — 11 — 1992

## அமரர் தம்பிமுத்து இராமநாதன்

(முன்னாள் அதிபர், கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்)

திதி 08 - 12 - 1993

ஆண்டு ஒன்று அகன்றாலும்
உங்கள் அன்பு எம்மை விட்டகலாது
உங்கள் ஆசியும் அறிவுரைகளும்
இன்றும் எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.


தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

உடுவில்,
சுன்னாகம். (67368)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13 — 12 — 1939

உதிர்வு: 22 — 11 — 1989

அமரர்

## பொன்னையா தனபாலசிங்கம்

(வலி-கிழக்கு வட பகுதி ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி)

திதி: 08 - 12 - 1993

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல எம்மையெல்லாம் காத்தீரே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டு நான்கு சென்றாலும், உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலா.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள் மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

ஸ்ரீவிக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. [28325]

---

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

# இலவச சித்த ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் (ஓடலி)

# பதிற்கடமை பதவி வெற்றிடம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் பதில் கடமை புரிவதற்கு, ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் (ஓடலி) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. வயது:
   18 வருடத்திற்கும் 40 வருடத்திற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி, எண்கணிதம்/தூய கணிதம்/வர்த்தக கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
   அல்லது
   க. பொ. த. (சா/த) வரையான கல்வியுடன் ஐந்து வருடங்களுக்குக் குறையாத சேவையாற்றியிருத்தல்.
3. அனுபவம்:
   ஆயுர்வேத மருந்து தயாரிக்கும்/கொடுக்கும் துறையில் ஒருவருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
4. இப்பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2. விண்ணப்பதாரிகள், தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, கல்வித் தகைமை, தொழில் சார்ந்த தகைமை, முன்னைய அனுபவம் ஆகிய சுய விவரத் தரவுகளை உள்ளடக்கித் தயாரித்த விண்ணப்பங்களை 1993-12 22ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் எனக்குத் தவறாது கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. விண்ணப்பத்துடன், பிறப்புத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமை, தொழிற்றுறை சார்ந்த தகைமைப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமைச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய், 1993-12-06.

---

எஸ். எம். பெர்னாண்டோ
நிறுவன ஆதரவில்
யாழ். றோட்டறக்ட் கழகம்
நடத்தும்

# மாபெரும் உள்ளரங்க விளையாட்டு போட்டிகள்

**(OPENS)**

1. பூப்பந்தாட்டம் (BADMINTON)
2. மேசைப் பந்தாட்டம் (TABLE TENNIS)
3. சதுரங்கம் (CHESS)
4. கரம் (CARRAM)
5. ரெனிஸ் (TENNIS)

* விண்ணப்பப் படிவங்கள் பெற வேண்டிய இடங்கள்

1. எஸ். எம் பெர்னாண்டோ
   ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
2. Y. M. C. A
   சுண்டிக்குளி
3. விளையாட்டுத்துறை
   பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

விண்ணப்ப முடிவு திகதி: **10 - 01 - 94**

செயலாளர்,
யாழ் றோட்டறக்ட் கழகம்.

[28330]

---

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)

# பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பொது முகாமையாளர்

சம்பளம் இல. 7 (புதிய சம்பளத் திட்டம்) 1505 — 75 X 6 — 100 X 6 — 2555 இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவு பணியாளர் 6ஆவது சம்பளத் திட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 7ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வையில் ஆறு வருடங்களுக்கு குறையாது வேலை செய்த அனுபவம் உள்ளவர்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரம் (உயர் தரம்) / கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் எட்டு வருடங்களுக்கு குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

## 2. கணக்காளர்

சம்பளம் இல. 9 (புதிய சம்பளத் திட்டம்) 1105 — 60 X 4 — 75 X 11 — 2170 இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் / கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காய்வாளர் / கணக்குப் பரிவாளர் / கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர் / கணக்காளர் / மேற்பார்வையாளர் மட்டப்பதவியில் வேலை செய்து நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

(இ) கூட்டுறவுப் பணியாளர் அல்லது தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த (உயர் தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களுடன் கணக்காளர் / கணக்காய்வாளர் / மேற்பார்வையாளர் மட்டப்பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18 — 40 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. கூட்டுறவுப் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவர்கள் தமது சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் தலைவர், ''யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்'' இல. 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: **22 — 12 — 1993**
பி.ப. 3 மணிக்கு முன்பு

- தலைவர்.

(சி-6665)

---

# இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களுக்கு

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகமானது யாழ். மாணவர்களுக்கான தகவல் மற்றும் பதிவு செய்தல் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் போன்ற சேவைகளை வழங்குவதற்கு, இல. 140, பலாலி வீதியில் அமைந்திருக்கும் எமது நிறுவனத்தில் ஒரு தகவல் சேவை நிலையத்தை ஆரம்பித்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

சோமேஸ்வரன், இராஜநாயகம் அன் கோ.
பட்டயக் கணக்காளர்கள்.

(28321)

---

உ

சாமியே சரணம் ஐயப்பா

# பூரண புஷ்கலா சமேத ஹரிகர புத்திர (ஐயனார்) ஆலய

(சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, கல்வயல்)

## ''மண்டல விரத ஐயப்பன் விசேட பூஜை''

கார்த்திகை மாதம் 20 ஆம் நாள் [05-12-1993] ஞாயிறு மாலை 4 மணிக்கு விசேட பூஜையுடன் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்விழா பொங்கல் தினத்தன்று மகரஜோதி விழாவுடன் (மகர விளக்கு பூஜை) நிறைவுறும்.

ஐயப்பன் நாம பஜனையுடன், தினமும் ஐயப்பன் புராண வரலாறு பற்றிய

சொற்பொழிவு

மேற்படி ஆலய பிரதமகுரு
கல்வயல்

**சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள்**

(ஆசிரியர், குருசாமி வித்தியாலயம், கைதடி)

அவர்களால் நடத்தப்படுகிறது.

ஐயப்பன் அருள்வேண்டிட
அனைவரும் திரண்டு வாரீர்

சு. சிவானந்தன்
ஆலய தர்மகத்தா.

(28831)

---

# மக்கள் வங்கி

## எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்

## பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன

**13-12-93** இல் இருந்து பயிற்சிப் பரீட்சையும் பரீட்சையின் பின் அதற்க்கான விளக்க வகுப்புக்களும் நடைபெறும்

ஆசிரியர் **அ. குமாரவேல்**

இயக்குநர்,

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6583)

---

# சிவானந்த குரு குல வகுப்புக்கள்

தற்போது சனி, ஞாயிறு வகுப்புக்களை நடத்தி வரும் மேற்படி குருகுலத்தில் இத்துடன் மேலதிகமாக திங்கள், புதன் ஆகிய நாட்களிலும் சூக்தங்கள், சப்தசதி உட்பட விசேஷ வேத மந்திர வகுப்புக்கள் நடைபெற உள்ளன. பழைய, புதிய மாணவர்கள் நாளை (09-12-1993) வியாழன் காலை 9-00 மணிக்கு வந்து பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

விசேஷ வேதாத்யயன வகுப்பு
நியாய சிரோமணி
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
அவர்கள்

குருகுல ஆசிரியர்கள்:-
பண்டிதர் சி. சதாசிவ சர்மா
பிரம்மஸ்ரீ நடன சபாபதி சர்மா

இங்ஙனம்;
நா சர்வேஸ்வர குருக்கள்
பொதுச் செயலாளர்

33/1, கடையிற்சாமி வீதி,
யாழ்ப்பாணம். (6737)

---

# கண்ணீர் அஞ்சலி

சின்னக்கடைப் பகுதியில் கடந்த 05-12-1993 இல் நடந்த விமானக் குண்டு வீச்சில் அகால மரணமடைந்த எமது சங்க முன்னாள் தலைவர்

## அன்ரனி சாள்ஸ்

மற்றும் ஏனைய வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இவர்களின் இழப்பால் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் காயமடைந்த அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- குருநகர் வர்த்தகர் சங்கம்

(சி/6668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இயலாமையின் வெளிப்பாடு!

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் அரசாங்கப் படைகள் சந்தித்துவரும் தோல்விகளைத் தடுப்பதற்கு, வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் உதவிகளைப் பெறுவது குறித்து அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறதாம்.

பூநகரித் தாக்குதலில் ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்தே அரசு இந்த வழியை ஆலோசித்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் பூநகரியில் கொடுத்த பேரடி அரசாங்கத் தரப்பினருக்கு கடுமையாக உறைத்துவிட்டது. யுத்தத்தில் மிக ஆழமான காயத்தை உண்டாக்கிவிட்டது. இதனைத் தென்னிலங்கைப் பத்திரிகைகளே கவலையுடன் ஒப்புக்கொண்டுள்ளன.

ஓர் நாட்டின் அரசாங்க இராணுவம், அளவிலும் வளத்திலும் பெரிய இராணுவம், அளவில் சிறியதான போராளிகள் குழுவிடம் பெற்ற பெரிய தோல்வி என்றே சர்வதேசக் கண்ணும் மதிப்பிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சரிப்பட்டுவராது; உகந்ததல்ல என்பதனை உணர்த்துவதாகவும் அரச படைகளின் பூநகரித் தோல்வி அமைகிறது.

ஆனால் அரசாங்கம் அந்தப் பக்கத்தை பார்க்கவும் உணரவும் தயாராக இல்லை; மறுக்கிறது. இராணுவத் தீர்வு காணும் எல்லைத்தைக் கைவிட்டு அரசியல் வழியை நாட அது மனம் கொள்வதாக இல்லை. அதற்குப் பதிலாக, இராணுவத் தீர்வுக்கான — அதாவது தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கான — புதிய வழிமுறைகளைக் கண்டறிவதிலும், பரீட்சித்துப் பார்ப்பதிலுமே தனது சிந்தனையைச் செலுத்தி வருகிறது.

அந்தச் சிந்தனையின் விளைவே இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் கொண்டுவரப்படும் மாற்றங்கள், வெளிநாட்டில் பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் களத்துக்குக் கொண்டுவருதல், மேலதிகமாக நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல்போன்ற நடவடிக்கைகள். எப்பாடுபட்டும் அரசியல் தீர்வு ஒன்றுக்கு இடம் கொடுக்காது, இராணுவ வெற்றியை அடைந்துவிட வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயற்படுகிறது. அந்தச் செயற்பாட்டின் படிமுறைகளில் ஒன்றே பயங்கரவாதத்தை முறியடிப்பதில் அனுபவம் உள்ள வெளிநாடுகளில் இருந்து இராணுவ நிபுணர்களை வருவிப்பது என்ற உத்தேசம்.

ஆனால், வெளிநாட்டிலிருந்து இராணுவ நிபுணர்களை வருவித்து, அவர்களின் ஆலோசனைப்படியும், வழிகாட்டுதலின் கீழும் இராணுவ நடவடிக்கைகளை வகுத்துச் செயற்படுவது என்பது—

விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்கா அரச படைகள் தமது சொந்த மூளையையும், திறமையையும் பயன்படுத்தி வெல்ல முடியாது என்பதனை ஒப்புக்கொள்வதாகும்.

பொருளாதாரம் தொடக்கம் தொழில் நுட்பம் வரைக்கும் எல்லாவற்றுக்கும் வெளிநாட்டு உதவி இல்லாமல் எதுவுமே செய்யமுடியாதிருப்பது போல, தமிழர்களை அழிப்பதனையும் வெளிநாட்டு உதவி இருந்தால் மட்டுமே செய்ய முடியும் என்ற நிலையை உணர்த்துகிறது. சுருங்கக்கூறின் இராணுவத் தீர்வை எய்துவதில் அரசு தனக்குள்ள இயலாமையை வெளிப்படுத்துகிறது.

தமிழர்களுக்கு எதிரான போரை, அவர்களை அழித்தொழிப்பதற்கான இராணுவத் தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது சொந்த வளத்தைக்கொண்டு நடத்தவில்லை. வெளிநாட்டு நிதி உதவிகளைப் பயன்படுத்தியே போருக்கான செலவீனத்தை ஈடுசெய்கிறது. எனவே வெளிநாட்டு நிபுணர்களை வருவிப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

அரசு அப்படிச் செய்தால் தமிழர்கள் மேலும் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் செயற்படவேண்டும். தமது போராட்டத்தை மேலும் கூர்மைப்படுத்த வேண்டிய கட்டாய தேவை உண்டு.

ஜி. சீ. ஈ. பரீட்சை நடக்கும் வேளையில்

# வடக்கே - குண்டுவீச்சுத் தாக்குதல்கள்
# தெற்கே - ஒலிபெருக்கிக்குக் கூடத் தடை!

யாழ்ப்பாணம், டிச. 8

ஜி. சீ. ஈ சாதாரண பரீட்சை திங்களன்று இலங்கை முழுவதிலும் ஆரம்பமாகியது. இப்பரீட்சைக்கு மொத்தம் 5 லட்சத்து 38 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இந்தப் பரீட்சை அமைதியாகவும், பரீட்சார்த்திகளுக்குத் தொந்தரவு இல்லாமலும் நடக்க வேண்டும்.

ஆனால் தமிழீழப் பகுதிகளில் தமிழ் மாணவர்கள் விமானக் குண்டு வீச்சு நடக்குமோ என்ற மனப் பயத்துடன் தான் பரீட்சை நிலையங்களுக்கு முதல் நாளன்று சென்றார்கள். இப்போதும் செல்கிறார்கள்.

பரீட்சைக்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண நகரில் இரண்டு தடவைகள் ''சியாமாசெட்டி'' விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி 17 மக்களை கொடூரமாகக் கொன்றன.

முதல் நாளான திங்களன்று கிளிநொச்சியில் பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு அருகில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சமீபத்தில் இருந்த கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பரீட்சை எழுதிய பரீட்சார்த்திகள் சிதறி ஓட வேண்டி ஏற்பட்டது.

தமிழீழப் பகுதிகளில் மாணவர்கள் பீதியுடன் பரீட்சை எழுதவேண்டிய நிலையை உருவாக்கியுள்ள அரசு —

ஸ்ரீலங்காப் பகுதியில் பரீட்சை மண்டபங்களின் சுற்றாடலில் ஒலி பெருக்கி பயன்படுத்த வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது.

அது மட்டுமா?

ஜி. சீ. ஈ சாதாரண பரீட்சை குறித்து பரீட்சை ஆணையாளர் பின்வருமாறும் அறிவுறுத்தி உள்ளார்:-

★ பரீட்சை நடைபெறும் இடங்களில் தேவையற்ற முறையில் நடமாடுவதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

★ பரீட்சை நிலையங்களின் சுற்றாடலில் ஒலி பெருக்கியைப் பயன்படுத்தக் கூடாது.

★ பரீட்சை நிலையங்களுக்கு அருகில் வசிப்போர் தங்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒலியை குறைத்துப் பயன்படுத்த வேண்டும்.

★ பரீட்சை குழப்பமின்றி நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். (அ-5)

சிறிமாவோவுக்குப் பின்னர்

## சு. கவை வழிநடத்த தகுதியானவர் யார்?

கொழும்பு, டிச. 8

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பின்னர் சுதந்திரக் கட்சியை வழிநடத்திச் செல்லக்கூடியவர் லஷ்மன் ஜயக்கொடி என்று பெரும்பாலான சுதந்திரக் கட்சி எம். பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

திரு. ஜயக்கொடி தற்போது சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக இருந்து வருகின்றார்.

திரு. ஜயக்கொடியை கட்சியின் தலைவராக்கும் யோசனை க. சித் தலைமைப் பீடத்தில் முன்வைக்கப்பட்டு, திருமதி பண்டாரநாயக்காவின் அபிப்பிராயம் பெறப்படும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

மட்டக்களப்புக்குக் கூட்டிச் சென்று

## குடியமர்த்திய தமிழருக்கு நிவாரணம் வழங்கவில்லை

யாழ்ப்பாணம், டிச. 8

கொழும்பில் இருந்து பலாத்காரமாக மட்டக்களப்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு மீளக் குடியமர்த்தப்பட்ட தமிழர்களுக்கு இரண்டு மாதங்களாக எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் முதலில் மட்டக்களப்பு நாவலடி அகதி முகாமில் சிலகாலம் தங்கவைக்கப்பட்டு பின்னர் வாழைச்சேனையில் கட்டாயத்தின் பேரில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் இருந்து இதுவரை எதுவித வசதிகளோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் அம்மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது. (ஒ-எ)

## பாக். மக்கள் கட்சியின் தலைவராக பெனாஸிர்

இஸ்லாமபாத், டிச. 8

ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக பிரதமர் பெனாஸிர் பூட்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை தலைமைப் பதவியை வகித்து வந்த அவரது தாயாரான 65 வயது நிரம்பிய நுஸ்ரத் பூட்டோவின் இடத்திற்கு இவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

பெனாஸிரின் சகோதரரான முர்தாஸ் பூட்டோவை நுஸ்ரத் பூட்டோ வெளிப்படையாக ஆதரித்து வருவதால், ஆத்திரமடைந்து இருக்கும் பெனாஸிர் தனது தாயாரை கட்சித் தலைவர் பதவியில் இருந்து வெளியேற்றியதாக நம்பப்படுகிறது.

இதனிடையில்—

கட்சித் தலைவர் பதவியை தாம் கைவிடப்போவதில்லை என்று நுஸ்ரத் பூட்டோ அறிவித்திருக்கிறார். (ஒ-எ)

போராட்டத்துக்கு

## உயிரூட்டும் இலக்கியம் வெளிவர வேண்டும்

### கவிதை நூல்வெளியீட்டு விழாவில் உரை

''போராட்டத்துக்கு உயிரூட்டும் இலக்கியங்கள் வெளிவர வேண்டும். போராட்டத்தை மக்கள் புரிந்து கொள்ள, அணி திரளச் சாத்தியமானது எது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டிய கடப்பாடு எழுத்தாளருக்கு உண்டு''

நிலா தமிழின் தாசனின் ''நாளை'' கவிதை நூலை வெளியிட்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் ''நாளை'' கவிதை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

கவிஞர் இ. முருகையன் விழாவில் பேசும்போது கூறிய தாவது:

ஈழத்தில் ஆற்றல் படைத்த தேசிய விழிப்பு முயற்சி, அரசியலுடன் கலை இலக்கியம் இணைந்த செயற்பாடுகள் ஆகியவற்றால் தமிழ் சீராக வளர்கிறது இக்கவிதை நூல் தமிழின் செழுமையை எடுத்துக் கூறுகிறது: —என்றார்.

கவிஞர் சோ பத்மநாதன் பேசும் போது, ''இனவாதக் கொடூரங்களுக்கும் அவமானங்களுக்கும் மத்தியில் திருமலை நகரின் அவலங்களைத் தனது வலிமை மிகுந்த வார்த்தைகளால் எடுத்துக் கூறுவதன் மூலம் ஒரு நல்ல கவிஞனுக்குரிய அடையாளத்தை நூலாசிரியர் பதித்துக் கொண்டார்'' என்று கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. ரவி, நூலாசிரியர் நிலா தமிழின் தாசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

திருமலை மாவட்டம் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி மங்கள விளக்கேற்றினார். நூலின் முதற் பிரதியை திரு. சுதாவிடமிருந்து தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பெற்றுக்கொண்டார். (த-11)

உலக வங்கி மற்றும் நாணய நிதிய கூட்டங்களில்

## பாஸ்கரலிங்கம் பங்குபற்றியது குறித்து பதில் கூற தடுமாற்றம்

கொழும்பு, டிச. 8

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் கூட்டங்களில் கலந்துகொள்ள நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் ஏன் அனுப்பப்பட்டார்?

நாடாளுமன்றத்தில் இக்கேள்வி எழுப்பப்பட்டது.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா பேசியபோது —

''முதலீட்டு ஊக்குவிப்புப் பயணங்களை மேற்கொள்வதற்கு அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது. அப்படியான பயணங்கள் அதிகாரிகளின் பொழுது போக்கு நிகழ்ச்சிகளாக மாறி விடுகின்றன. கனடாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நான் மேற்கொண்ட முதலீட்டு ஊக்குவிப்புப்பயணம் பிரமாண்டமான வெற்றியைக் கொடுத்தது'' — என்று சொன்னார்.

இக்கட்டத்தில் தான் எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர்— அப்படியானால் பாஸ்கரலிங்கத்தை உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் கூட்டங்களுக்கு அரசு 'அனுப்பியது ஏன்? — என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர் —

''பதில் சொல்வதற்குக் கஷ்டமான கேள்வி இது. இது பற்றிய தீர்மானம் எம்முடையது அல்ல. இது குறித்து மேலும் கேள்விகளைக் கேட்கவேண்டாம். அது என்னைச் சிக்கலில் மாட்டிவிடும். இக்கேள்விக்குப் பதிலளிப்பது எனக்குச் சங்கடத்தைத் தருகின்றது'' — என்று பதிலளித்தார். (ஒ-எ)

அச்சுவேலிப் பகுதியில்

## மதகுகள் மூடுண்டதால் மழைநீர் தேங்கும் நிலை

அச்சுவேலி, டிச. 8

அச்சுவேலி ஆவரங்கால் பகுதிகளில் உள்ள பல மதகுகள் குப்பை கூழங்களால் மூடப்பட்டுள்ளதால் இப்பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வீதிக்குக் கீழ் மழைநீர் பாய வசதியாக பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த மதகுகள் மற்றும் வெள்ள வாய்க்கால்களே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் 17ஆம், 18ஆம் கட்டைகளுக்கு இடையில் மட்டும் 5 மதகுகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மழை நீர் குடாக்கடல் நீரேரிக்கு செல்ல முடியாமல் வெள்ளம் தேங்கி நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன. (த-11)

## மடு முகாம் அகதிகளுக்கு உணவுப் பற்றாக்குறை

கொழும்பு, டிச. 8

மடு அகதி முகாமில் உள்ள அகதிகளுக்கான உணவு விநியோகம் ஐ. நா. அகதிகள் தூதரகத்தால் நிறுத்தப்பட்டதை அடுத்து அங்கு உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருக்கும் 32ஆயிரம் அகதிகள் உணவுப்பற்றாக் குறையால் கஷ்டமுறுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உணவு விநியோகத்தை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்றும்—மடுவில் உள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் ஐ. நா. அகதிகள் தூதரகத்தை கேட்டுக்கொண்டுள்ளனர்.

உடன் நடவடிக்கை எடுக்காவிடில் அகதிகள் பெரும் பிரச்சினைக்குள்ளாக நேரிடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (ஒ-எ)

# ஹெலியின் குறுக்குக்கம்பியை பிடித்து தொங்கி தப்பினேன்!

### பூநகரியில் இருந்து உயிர் தப்பிய இராணுவக் கப்டன் தகவல்

பூநகரி இராணுவ மற்றும் கடற்படைக் கூட்டுத்தள அழிப்பின்போது உயிர்தப்பிய இராணுவக் கப்டன் பிரிமல் டி சொய்ஸா, தாம் ஹெலிக்கொப்டரின் குறுக்குக் கம்பியை கால்களாலும் கைகளாலும் பிடித்துத் தொங்கியபடி பலாலி தளத்துக்குச் சென்றதாகத் தெரிவித்தார்.

கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் இவர் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் பூநகரி இருந்தபோது தாம் உயிர் தப்பியது பற்றி கொழும்புச் செய்தியாளர்களுக்கு விவரித்தார்.

கஜபா ரெஜிமெண்டின் மூன்றாவது பிரிவுத் தளபதியான இவர் சொன்னதாவது:

*நவீன ஆயுதங்களுடன் புலிகள் தாக்கினர்*

சம்பவதினம் அதிகாலை 1-35 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். அப்போது முகாமில் 2 ஆயிரத்துக்கு அதிகமான படையினர் இருந்தனர். நவீன ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகள் தாக்கினார்கள். நவீன வானொலி தொடர்பு சாதனங்கள் அவர்களிடம் இருந்தன.

தோளில் வைத்து இயக்கும் ஆர். பி. ஜி. துப்பாக்கிகளையும் இரவு நேரப்பார்வைக்கு உதவும் கருவிகளையும் அவர்கள் வைத்திருந்தனர். இந்த ஆயுதங்களை நாம் ஒரு [illegible] யாது. [illegible] கும் 120 குண்டுகளே தரப்பட்டிருந்தன. எம்மிடம் ஆர். பி. ஜி. துப்பாக்கிகளும் மோட்டார்களும் தரப்பட்டிருந்தன. அவற்றைப் பயன்படுத்தக் கூடிய குண்டுகள் எமக்குத் தரப்படவில்லை.

*வந்த தினத்தன்றே உயிரிழப்பு*

பூநகரியில் கொல்லப்பட்ட படையினரில் பெரும்பாலோர் புதிதாகத் திரட்டப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் ஆவர். அதுமட்டுமல்ல, பூநகரி வந்தடைந்த அன்றைய தினமே அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

நானும் இன்னும் 19 படையினரும் ஹெலிக்கொப்டர் ஒன்றைத் தரை இறங்கச் செய்து அதில் தப்பிச் செல்ல முயற்சித்தோம். கடற்கரை மணலில் H என்ற எழுத்தை பெரிதாகக் கீறினோம்.

முயற்சி வெற்றியளிக்கும் வரை எம்மிடம் இருந்த இரண்டு கிரனேட்டுக்களால் கடலில் மீன்களைக் கொன்று நாம் வைத்திருந்த சொற்ப அரிசியில் சோறு சமைத்து சாப்பிட்டோம்

*மண்டைதீவுக்கு நீந்தித் தப்பினர்*

எப்படியாயினும் ஹெலிக்கொப்டர் வரும் என்று நம்பிக்கையாக இருந்தோம். ஒரு கட்டத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டிருந்தோம். எம்முடன் இருந்த கோப்பரல் ஒருவரும் இன்னும் இரண்டு பேரும் பத்து மைல் நீந்தி மண்டைதீவு சென்றனர்.

பின்னர் ஹெலிக்கொப்டர் ஒன்று வந்து பல தடவைகள் வட்டமிட்ட பின்னர் தரை இறங்கியது. எம்முடன் இருந்தவர்கள் ஹெலிக்குள் பாய்ந்து சென்று ஏறினர். நான் அருகில் ஓடிச் சென்று ரேடியோ செற் ஒன்று தருமாறு கேட்டேன்

ஹெலிக்குள் இருந்த கடற்படைக் கொமாண்டர் ஒருவரின் கழுத்தில் தொங்கிய ரேடியோ செற்றை இழுத்தேன். அந்தச் சமயம் ஹெலி மேலே எழும்பியது. நான் திடீரென ஹெலியின் குறுக்குக் கம்பியை பிடித்துக் கொண்டு கால்களை அதன் மேல் போட்டேன். அந்தச் சமயத்தில் எனது மனைவியையும், குழந்தையையும் நினைத்துக் கொண்டேன். நான் பலாலிக்கு எப்படியும் செல்வது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

—இவ்வாறு அவர் கூறினார் (ஒ-எ)

இரு மாதங்களில் மட்டும்

## சுன்னாகம் நீதிமன்றில் 69 வழக்குகள் விசாரணை

வலிகாமம் தெற்கு, டிச. 8

சுன்னாகம் மாவட்ட நீதிமன்றம் ஆரம்பமாகி இரண்டு மாத காலத்தில் மொத்தம் 69 வழக்குகள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன இவற்றில் 55 வழக்குகளுக்கான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

நீதியாளர்கள் திரு. க. பூவேந்தன், திரு. க. தேசிகன், திரு. ஞா. அறிவொளி ஆகியோர் இவ் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புக்களை வழங்கினர்.

மதுபானம் சம்பந்தமான வழக்குகள் 19, திருட்டுக்கள் சம்பந்தமான வழக்குகள் 20, சமூக சீர்கேடு சம்பந்தமான வழக்குகள் 9 உட்பட மற்றும் சில வழக்குகள் அக்காலப் பகுதியில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டன. (ஓ-152)

## ஆண்டு 5 பொதுந்தேர்வு

யாழ்ப்பாணம், டிச 8

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆண்டு 5 பொதுத் தேர்வுக்கான புள்ளிகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும். அதிபர்கள் இப்புள்ளிகளை விடைத்தாள்களுடன் ஒப்புநோக்கித் தமது புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (க)

## உவர்நில மரநடுகை

அராலி, டிச. 8

அராலி மேற்கின் கடற்கரை அண்டிய பகுதிகளில் உவர் நில மர நடுகைத் திட்டம் அண்மையில் ஆரம்பமாகியது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால வழங்கிய 250 சவுக்கு மரக்கன்றுகளும், 250 புளியங்கன்றுகளும் அப்பகுதியில் நடப்பட்டுள்ளன. (க- 12)

## கல்வி அமைச்சராக அனுரா?

கொழும்பு, டிச. 8

அனுரா பண்டாரநாயக்காவுக்கு கல்வி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

வரவு செலவுத் திட்டத்தின் மீதான குழு நிலை விவாதம் முடிவடைந்த பின்னர் இம்மாதம் 16ஆந்திகதிக்கு பின்னர் கல்வி அமைச்சராக அனுரா பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சராக தற்போது பதவி வகிக்கும் டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டாரவுக்குச் சங்கடம் ஏற்படுத்தாமல் இருக்கவே இந்த ஏற்பாடு என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும்— உயர் கல்வி அமைச்சராக லொக்குபண்டாரவே தொடர்ந்தும் இருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து

## பண்ருட்டி ராமச்சந்திரன் வெளியேற்றப்பட்டார்

சென்னை, டிச. 8

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

நேற்று முன்தினம் சென்னையில் கூடிய பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், பண்ருட்டி இராமச்சந்திரனை கட்சியின் அடிப்படை உறுப்பினர் மற்றும் பதவிகளில் இருந்து வெளியேற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

தமது அரசியல் வாழ்வை தி. மு. கவுடன் ஆரம்பித்த பண்ருட்டி இராமச்சந்திரன் பின்னர் அ. தி. மு. க. வுடன் சேர்ந்து பணியாற்றினார். தி மு க. மற்றும் அ தி.மு க. அரசுகளில் அமைச்சராகவும் அவர் பணியாற்றினார்.

அ. தி. முகவின் தலைமைப் பதவியை ஜெயலலிதா ஏற்ற போது, அவர் அ. தி. மு. க. வில் இருந்து விலகி பாட்டாளி மக்கள் கட்சியில் சேர்ந்து, 1991 சட்டசபைத் தேர்தலில் அதன் சார்பில் எம். எல்.ஏயாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-எ)

## சஞ்சிகை வெளியீடு

வண்ணைக் கவிஞரின் ''துர்க்கா'' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மாவிட்டபுரம் மாவீரர் கலையரங்கில் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும்.

## தேக்கம் நாற்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 8

அரசாங்க அதிபரினால் வனத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தேக்கம் நாற்று முளைகள் தற்பொழுது விநியோகிப்பதற்காக யாழ்ப்பாணம் வனத் திணைக்களத்தில் இருக்கின்றன.

இவற்றைப் பெற்று நட்டுப் பராமரிக்க விரும்பும் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், கோவில்கள், பொது நிறுவனங்கள், தனியார் ஆகியோர் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ். வனத் திணைக்களத்தில் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்திக் கொடுக்குமாறு பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் கோரி உள்ளார். [இ]

**காட்டின் மரம் உயர நாட்டின் தரம் உயரும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது இல்லத்தின் சகோதரிகளான கிரிஜா, மாலா ஆகியோரின் அன்புச் சகோதரனான.

## ஜோன் அருட்செல்வன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள் அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஹரியற் உவின்சிலோ பெண்கள் இல்லம்
பண்டத்தரிப்பு.

[C/6667]

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து சுப்பையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா அவர்கள் 7-12-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தேவவசீகரன், தேவசுகந்தி, REV. தேவகரன் (தெ. இ. தி. சபை - அச்சுவேலி ஊழியன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திலிங்கம், தம்பியையா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவரது நல்லடக்கம் நேற்று (7-12-93) மாலை 4 மணிக்கு பிப்பிலி சேமக்காலையில் நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்
தேவவசீகரன்
(மகன்)

லைமன் ஒழுங்கை,
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(28333)

## ஐயம்பிள்ளை தம்பிராசா

சுன்னாகம் கிழக்கை பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தம்பிராசா 7. 12. 93 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலம் சென்ற ஐயம்பிள்ளையினதும் செல்லாச்சியினதும் அன்பு மகனும் திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளையின் அருமைச் சகோதரனும் காலம் சென்ற பரிமளத்தின் அன்புக் கணவனும் திருமதி தாரிணி சிறிபாலகெங்காதர் (முன்னைநாள் ஆசிரியை அல் அக்ஸா மகாவித்தியாலயம் கல்பிட்டி) தற்போது U. K, அவர்களின் பாசமிகு தகப்பனாரும், திருமால் வளவன் (Swiss), வாகீசன் (டென்மார்க்), திருமதி சிவானந்தி கதிர்காமநாதன், மாதினி, சிறிபால கெங்காதரன் (U. K). ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8. 12. 93 புதன் கிழமை இன்று நடைபெறுமென அறியத்தருகிறோம்.

தகவல்:
முகுந்தன்
(மருமகன்)

புலோலி தெற்கு.

(6843)

## முத்துக்குமாரு வெங்கடேசன்

முத்துக்குமாரு வெங்கடேசன் 07-12-93 (செவ்வாய்க்கிழமை) காலமானார்.

இவர் நீலாம்பிகையின் அன்புக் கணவரும் நாகலட்சுமி, மருதையா, முத்துக்குமாரசாமி (சவுதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தில்லைநாதன், விஜயலட்சுமி, வனஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சசி, குமுதினி, கேமா, நடேசன், கலா, மாலா, கோபி, கிருபா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08-12-93) புதன் கிழமை மாலை 3 மணிக்கு முள்ளி வீதி, அரியாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்
திருமதி முத்துக்குமாரசுவாமி

அரியாலை.

(28336)

நயினை

## திருமதி தையல்முத்து ஐயாத்துரை

நயினை 6 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி தையல்முத்து ஐயாத்துரை அவர்கள் நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பரராசசிங்கம் (வர்த்தகர் கொழும்பு), மகாலிங்கம் (வர்த்தகர் கொழும்பு), மகேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், பதுமாதேவி, சரஸ்வதி, தனபாலசிங்கம் (வர்த்தகர் கொழும்பு) சண்முகரெத்தினம் (வர்த்தகர் குமாரவேல் கொம்பனி கொழும்பு) திருச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவேந்திரன் (சுவிஸ்), மோகேந்திரன் (ஆசிரியர் – கனடா), யோகேந்திரன் (மாணவன்), கமலவேணி (ஜேர்மனி), கலாதரன் (டென்மார்க்), சசிதரன் (யாழ் பல்கலைக் கழகம் கலைப் பிரிவு), வசந்தவேணி (டென்மார்க்), சிறீதரன் (டென்மார்க்), முரளீதரன் (மாணவன்), சிவகுமார் (மாணவன்), ஆனந்தி (மாணவி), சிவா (மாணவன்), மோகனதாஸ் (மாணவன்), பாமதாஸ் (மாணவன்), கிருஷ்ணதாஸ் (மாணவன்), தேவரஜனி (மாணவி) காந்தரூபன் (பிரான்ஸ்), லதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், செல்வி (சுவிஸ்), கெவின் (சுவிஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ராஜீவ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும், இராசமணி (நயினாதீவு), காலஞ்சென்றவர்களான பொன்னையா, நாகமணி, செல்லமுத்து, தங்கமுத்து, ஐயாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி: ச.பரமேஸ்வரி
(மகள்)
திருமதி:- ப பதுமாதேவி
(மருமகள்)

15, கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
திருநெல்வேலி.

(28334)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மோசமான காலநிலையைப் பயன்படுத்தி

# முல்லை, ஆனையிறவு முகாம்கள் மீது பூநகரி பாணி தாக்குதலுக்குத் திட்டம்

## உளவு அறிக்கைகள் தெரிவிப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தகவல்

கொழும்பு, டிச.

தற்போதைய மோசமான கால நிலையைப் பயன்படுத்தி முல்லைத்தீவு மற்றும் ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீது புலிகள் பூநகரி பாணித் தாக்குதலை நடத்தலாம் என்று உளவுத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி சண்டே ஐலண்ட் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

ஒதுக்குப்புறமாக உள்ள இந்த இரண்டு இராணுவ முகாம்களைச் சுற்றி விடுதலைப் புலிகள் தங்கள் பலத்தைப் பெருக்கி வருவதாக உளவுத்துறைத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

மேலதிக துருப்புகள் அனுப்புவதில் கஷ்டம்

கொந்தளிக்கும் கடல், இருளடைந்த மேகக் கூட்டங்கள் காரணமாக இந்த இரண்டு இராணுவ முகாம்களுக்கும் மேலதிக துருப்புகளையும் விநியோகங்களையும் அனுப்பி வைப்பது படையினருக்குக் கஷ்டமாக இருக்கும் என்று கருதியே அடுத்த தாக்குதலுக்கு இம் முகாம்களை விடுதலைப் புலிகள் தெரிவு செய்துள்ளனர் எனத் தாம் நம்புவதாக அதிகாரிகள் கூறினார்கள்.

பூநகரி பாணியிலான தாக்குதலையே இந்த இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சண்டே ஐலண்ட் தெரிவித்துள்ளது.

தினமும் மழை பெய்வது, பலத்த காற்று, மேகக் கூட்டங்கள் நிறைந்த வானம் முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் அடுத்த ஐந்து முதல் ஆறு வாரங்களுக்கு இருக்கும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்காலநிலை விடுதலைப் புலிகளின் பாரிய தாக்குதலுக்கு உகந்ததாக இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் வர்ணித்துள்ளன.

மோசமான காலநிலையின் போது தரையில் உள்ள படையினருக்கு வான் மற்றும் கடல் வழி உதவியை படையினர் வழங்குவதில் உள்ள கஷ்டத்தை விடுதலைப் புலிகள் தெரிந்து வைத்துள்ளனர் என்றும் இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை — முல்லைத்தீவு மற்றும் ஆனையிறவு இராணுவ முகாம்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையில் — வடபகுதியில் தொடரான பாதுகாப்பு நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## இன்று

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி வட இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிக்கிளை நடத்தும் மனையியல் கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (த-87)

★ ★ ★

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலை மாணவர்களின் கலைவிழா இன்று புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு நிலைய காசிப்பிள்ளை கலை அரங்கில் நடைபெறும். (இ-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

லெப். கேணல் மதி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான விலகல் முறை உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ றோயல் வி. க அணி எதிர் ஒற்றுமை வி. க அணி
★ லக்கிஸ்ரார் வி. க அணி எதிர் விநாயகர் வி. க ''ஏ'' அணி. (த-143)

★ ★ ★

கடந்த 4 ஆம் திகதி நடைபெற இருந்து மழைகாரணமாக ஒத்திவைக்கப்பட்ட யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பங்குபற்றும் கழகங்கள் யாழ். ப. நோ. கூ. சங்கம் — எதிர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம். (இ)

### அரசாங்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் அலுவலகத்தில், அது இயங்காதிருக்க மறியல் போராட்டம் நடத்தப்படும் என்றும் — பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காலக்கெடு விதித்திருந்தன.

இப்போது கொழும்பில் தங்கியிருக்கும் அரசாங்க அதிபர் ப.நோ.கூ. சங்கங்களுக்குரிய கொடுப்பனவுகளை திறைசேரியிடம் இருந்து பெறுவதற்கு முயற்சி செய்வதாகவும் —

அவர் கொழும்பில் இருந்து திரும்பிய பின்னர் ப. நோ. கூ. சங்கங்கள் எந்த நடவடிக்கையையும் எடுப்பது சிறந்தது என்றும் — உதவிப் பணிப்பாளர் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அறிவித்துள்ளார்.

இந்த புதிய நிலைப்பாடு குறித்து ஆராய்வதற்காக நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ப. நோ. கூ. ச. தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கூடி ஆராய உள்ளனர். இதற்கான கூட்டம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (அ-160)

### அரசின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் கட்சிகளும் முன் வர வேண்டும்.

அமைச்சர் தொண்டமானின் தந்திரம் தெளிவானது தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்கள் உள்ள பகுதிகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முழு ஏக போகத்தை ஏற்படுத்துவதே அத்தந்திரமாகும்.

எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று ஆசைப்படும் சக்திகள் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றில் உள்ளன. அச்சக்திகள் தொண்டமானின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடிக்க ஆசைப்படுகின்றன.

சிங்கள மக்களை முட்டாள்கள் என்று நினைக்கும் இச்சக்திகள் ஆட்சியைப் பிடிக்கும் திறவுகோல் தொண்டமானின் ஆதரவுதான் என்று எண்ணுகின்றன. (த-எ)

## யாழ் பல்கலை புதிய மாணவரை பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1992/93 ஆம் கல்வி ஆண்டில், வெவ்வேறு கற்கை நெறிகளில் சேர்க்கப்பட்டுள்ளோரை பதிவு செய்யும் நடவடிக்கைகள் பின்வரும்திகதிகளில் மேற்கொள்ளப்படும்.

9 ஆம் 10 ஆம் திகதிகளில்— விஞ்ஞான பீடம்.

11ஆம் 14ஆம் திகதிகளில்— கலைப் பீடம்.

15 ஆம் திகதி — மருத்துவ பீடம்.

16 ஆம் திகதி — விவசாய பீடம்.

(த-க)

## கலாஜோதி விருது வழங்கி கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு, டிச. 8

இராமநாதன் நுண்கலைக் கழக விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்த சர்மாவின் கலைச் சேவையை பாராட்டி உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய சிவஞானவாரியத்தினரால் 'கலாஜோதி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வாரியத்தலைவர் பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா விருதினை வழங்கினார்.

பண்ணிசை வேந்தர் என். வி. எம் நவரத்தினம், பிரம்மஸ்ரீ எஸ். வெங்கடேசசர்மா, சைவப்புலவர் எம். எஸ். ஸ்ரீ தயாளன், திரு. வி. ஜோகீஸ்வரன், திரு. கணேசரட்ணம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (ஒ-152)

### வெளியேறிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அகற்றும் பணியில் தற்போது விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

ராணுவ முகாம்கள் சொண்டச்சியிலும், சிலாவத்துறையிலும் இருந்த போது முள்ளிக் குளம், கொக்குப்படையான் ஆகிய பகுதிகளில் இருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மடுவிலும் வேறு இடங்களிலும் வசித்து வந்தனர்.

படையினர் வெளியேறியதை அடுத்து மக்கள் அங்கு குடியேறக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. (இ-த)

### மடு அகதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் முன்னேற்றம் இன்னும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

''அகதிகள் நலன் கருதி கிறிஸ்தவ தலைவர்களும் மன்னார் அரச அதிபரும் இவ்விஷயத்தில் முயற்சித்து வருகின்றனர். எமது மனிதாபிமான முயற்சியை மீண்டும் தொடர இவர்கள் ஏதாவது செய்ய முடியும் என்று நாம் நம்புகின்றோம்'' — என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வரை ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் மடு முகாமுக்குத் திரும்பமாட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

மடு அகதி முகாமில் இருந்து ஐ. நா. அகதிகள் தூதரகம் வாபஸானதைத் தொடர்ந்து, முகாமுக்கு உணவுப் பொருள்களை அரசு விநியோகிப்பதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்கிவருகிறது. (அ-எ)

### வவுனியாவில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்களில்இருந்து தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் தாண்டிக்குளம் மூலம் உள்ளே ஊடுருவித் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சமும் படை அதிகாரிகளிடம் உண்டாம்.

அத்தகைய தாக்குதல் நடக்கும் பட்சத்தில் அதனை முறியடிப்பதற்கான முன்னேற்பாடுகளில் படையினர் இப்போதே ஈடுபட்டு வருகின்றனர். அபாயச் சங்கொலி எழுப்பி பாதசாரிகள், சைக்கிளோட்டிகள், வாகனப்பயணிகள் ஆகியோரை அந்தந்த இடங்களிலேயே நிறுத்தி எதிர் நடவடிக்கை எடுப்பதும் படையினரின் தடும்பு நடவடிக்கையில் ஓர் அம்சமாகும்.

இது குறித்துப் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் மூன்றுமுறிப்பு, வெளிக்குளம், தாண்டிக்குளம், வேப்பங்குளம் ஆகிய எல்லைப் பகுதிகளை உள்ளடக்கிய வவுனியா நகரச் சூழல் முழுவதையும் சுமார் 45 நிமிட நேரம் ஸ்தம்பிதம் அடையச் செய்து பாதுகாப்பு ஒத்திகையொன்றைப் படையினர் மேற்கொண்டிருந்தன. (அ)

### தென்பகுதியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் கருவி பழுதடைந்திருந்ததால் இலங்கை வளிமண்டலத் திணைக்களம் நேற்றைய நில நடுக்கத்தைப் பதிவு செய்யவில்லை.

இதன் காரணமாக புதுடில்லி வளிமண்டல ஆய்வு கருவிகளின் உதவி பெறப்பட்டது. நிலநடுக்கம் 5 ரிஜ்டர் புள்ளியாக இருந்ததாகவும் —

இந்திய இலங்கை கடற்கரைகளுக்கு இடையில் இந்துமா கடலில் மையப்பகுதியில் அது நிலை கொண்டிருந்ததாகவும் புதுடில்லி நில நடுக்க ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது. (த-...)

### கடலில் மிதந்து வந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து எறிந்த போது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

... சென்ற ஒரு சம்பவத்தில் கொழும்புத்துறையில் இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் கையை இழந்தது தெரிந்ததே. (இ-17-15)

# மரண அறிவித்தல்கள்

## ஜோன் அருட்செல்வன் திருநாவுக்கரசு

நேற்று [07 - 12 - 93] நடைபெறவிருந்த அன்னாரின் இறுதி ஆராதனை இன்று [08 - 12 – 93] புதன் கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை சிறுவர் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனேஜர்

லீவை ஸ்போல்டிங் சிறுவர் இல்லம்,
வட்டுக்கோட்டை.

[C/6666]

## செல்லப்பா கந்தையா

மாவிட்டபுரத்தை சேர்ந்த செல்லப்பா கந்தையா [சப்பறம் பூந்தண்டிகை அமைப்பாளர்] 07 - 12 – 93 செவ்வாய் அன்று காலமானார்.

அன்னார் சின்னமணியின் அன்புக் கணவரும், குகதாசன் [Lanka Cement Limited], வரதாசன், சண்முகவடிவு [ஆசிரியை, யாழ். வீமன்காமம் மகா வித்தியாலயம்], சத்தியதாசன் [ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை திருநெல்வேலி], சபேசன், ராகினி ஆகியோரின் அன்பு தந்தையாரும், திருமதி திலகவதி குகதாசனின் அன்பு மாமனாரும், வித்தியாதரனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை [8-12-93] பிற்பகல் 2 மணியளவில் இறைவாசன் வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்
க சபேசன்

இறைவாசன் வீதி,
மல்லாகம்.

[28335]

## நமசிவாயம் முத்தாச்சி

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட முத்தாச்சி 7-12-93 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் பெ.நமசிவாயத்தின் (சின்த்துரை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி நாகாத்தையின் அன்பு மகளும், பெருமாள்-தையலம்மையின் அன்பு மருமகளும், பூமணியின் அன்புத் தாயாரும், பேரின்பநாயகத்தின் அன்பு மாமியாரும், சதீஸ்வரன், தர்சிகாவின் அன்புப் பேர்த்தியாரும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற இரத்தினம், பாலசிங்கம், ராசமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னர்மா, தங்கம்பா, நாகலிங்கம், நாகரெத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பி. ப 2.00 மணியளவில் கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பெ சின்னத்துரை

மகேந்திரன் கடை ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(28338)

## திருமதி தம்பு மாணிக்கவல்லி

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தம்பு மாணிக்கவல்லி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்புவின் அருமை மனைவியும் காலஞ்சென்ற முருகேசு, குமாரவேல் [Care], காலஞ்சென்ற வள்ளிநாயகி திருச்சிற்றம்பலம், காலஞ்சென்ற குழந்தைவேல், ஆறுமுகம் [பொறியியலாளர் Zambia] ஆகியோரின் அருமைத் தாயாரும் கனகலட்சுமி, காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம், பரிமளதேவி, தில்லைநாயகி ஆகியோரின் மாமியாரும் பராசக்தி [India], சிறிகாந்தன், திருமதி சிவகாமிப்பிள்ளை [Bhatt U K ], பாலசுப்பிரமணியம் [U.K.], திருமதி தெய்வநாயகி பாஸ்கரன் [U.K ], சுதா, சுபேந்திரன், ஜெயந்திரன், விஜியலட்சுமி, ஞானலட்சுமி [Zambia] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டினேஸ்சிவ பூட்டியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 11-00 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

தகவல்
த. குமாரவேல்
(மகன்)

வட்டுக்கோட்டை.

(28337)

திருமதி

## குணநாயகம் அந்தோனியாப்பிள்ளை

இல. 111, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி குணநாயகம் அந்தோனியாப்பிள்ளை காலமாகி விட்டார்.

இவர் காலஞ் சென்ற ஜோட்ஸ் குண நாயகத்தின் அன்பு மனைவியும் திருமதி பிளசம் குணமணி அடைக்கலம், திரு. யோசப் குணநாதன், செல்வி றீற்றா குணநாயகம், திரு. கிருபைநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் -

சு. அடைக்கலம் (அதிபர்), திருமதி பத்மா குணநாதன், திருமதி ஞானமணி கிருபைநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (8-12-93)பி.ப. 3-30 மணிக்கு பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
சு. அடைக்கலம்
(மருமகன்)

இல. 111, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

(28339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org